திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மதுரைக்கு அண்மையில் வந்திருந் தார்கள். மதுரையில் ஜனநெருக்கம் அதிகமான காரணத்தினால் நான் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்ததைப்போல் கோரிப் பாளையம் தேவர் சிலை அருகிலும், இரயில்வே ஸ்டேஷன் டவுன்ஹால் ரோடு சந்திப்பிலும், செயிண்ட் மேரீஸ் கீழவெளிப் பகுதியிலும், யானைக்கால் பகுதியிலும் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என்பது அவசியம் என்றே தெரிகிறது. அதற்கான நடவடிக்கை எடுத்து விரைவில் மேம்பாலம் கட்டிக் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தனிக் கேள்வி போடவும்.

கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*3502. டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியில் ஏற்கனவே 33/11 கே. வி. மின்அழுத்தம் உள்ள ஒரு துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தை 110/33—11 கே.வி.மின் அழுத்தம் உள்ள துணை மின் நிலையமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

டாக்டர் க. காஞ்சனா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பதில் ஏதேனும் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத்துணை மின் நிலையம் நிறுவு வதற்கு தர்மபுரி மாவட்டம் எட்டினப்பள்ளி கிராமத்தில்

1990 சனவரி 19]

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இந்த நிலத்தைக் கையகப் படுத்துவதற்கான வேண்டுகோள் வருவாய்த் துறை அதிகாரி களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நேரு அவர்களிடத்தில் மின்துறை இருந்தபோது கடந்த ஏப்ரல் திங்கள் 9ஆம் நாளன்று கிருஷ்ண கிரியில் துணை மின் நிலையம் அமைக்கத் தோதான இடம் வந்து பார்க்கச் சொல்லி, நாங்கள் வேண்டுகோள் விடுக்க, அவர்களும் வந்து பார்த்தார்கள். ஆனால் முழுமையாக எட்டுத் திங்கள் கழிந்து விட்ட நிலையில், மேலும் காலம் தாழ்த்தாமல் கிருஷ்ண கிரியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 8 மாதத்திற்கு முன்னாலே வேண்டுகோள் விட்டாலும் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் துணை மின் நிலையமே 1994—95ஆம் ஆண்டில்தான் நிறுவப்பட இருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளம்பிள்ளையில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*5300. திரு. பெ. வெங்கடாசலம் :
மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இளம்பிள்ளையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1994—95 ஆம் ஆண்டு இந்தப் பணியைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.